தமிழ்நாட்டின் நலனுக்காக

# தி.மு.கழகக் கூட்டணியை வலிமைப்படுத்துவோம்!

## மு.தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற மனிதநேய ஜனநாயகக் கட்சி செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!



சிதம்பரத்தில் நடைபெற்ற மனிதநேய ஜனநாயகக் கட்சி செயற்குழுக் கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் மு. தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

சிதம்பரம், ஜூலை 11–

“தி.மு.கழகக் கூட்டணியை வலிமைப் படுத்துவோம்” எனறு மனிதநேய ஜனநாயகக் கட்சி செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

மனிதநேய ஜனநாயக கட்சியின் தலைமை செயற்குழு கூட்டம் கட்சியின் தலைவர் மு.தமிமுன் அன்சாரி MLA தலைமையில் சிதம்பரத்தில் நடைபெற்றது.

இதில் கட்சியின் வளர்ச்சி,கட்சியின் உள்கட்டமைப்பு சீர்திருத்தம், தீவிர உறுப்பினர் சேர்க்கை, மக்களுடன் மஜக செயல் திட்டம் ஆகியன குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக மாநிலம் மேகதாதுவில் புதிய அணையை சட்ட விரோதமாக கட்டும் முயற்சியில் கர்நாடக அரசு ஈடுபட்டு வருகிறது. இது உச்சநீதிமன்ற தீர்ப்புக்கும், காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுக்கும் எதிரானதாகும்.

எனவே, ஒன்றிய பாஜக கூட்டணி அரசு கர்நாடகவின் இந்த முயற்சியை தடுத்து நிறுத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

கர்நாடக அரசு காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின் அடிப்படையில் மாதாந்திர அடிப்படையில் தரவேண்டிய தண்ணீரை தர மறுக்கிறது. காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவையும் நிறைவேற்ற மறுக்கிறது.

இந்நிலையில், சட்டவிரோதமாக தமிழகத்திற்கு வரும் உபரி நீரையும் தடுத்து மேகதாட்டுவில் அணை கட்டுவதற்கு கர்நாடக முதலமைச்சர் டி.கே சிவகுமார் நடவடிக்கை எடுத்து வருவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு நடுவர் மன்ற தீர்ப்பில் எந்த வித மாற்றமும் செய்ய முடியாது என்பதை உச்சநீதிமன்றம் தெளிவுபடக் கூறி உள்ளது.

இந்நிலையில், நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயல்படும் கர்நாடக முதல்வர் டி.கே சிவக்குமார் மீது தமிழக அரசு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர வேண்டும்.

### பி.சி.எம்.சான்றிதழ்: சட்டம் இயற்ற வேண்டும்!

புதிதாக இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்கும் சமூக மற்றும் கல்வி ரீதியாக பின் தங்கியவர்களுக்கு பிற்படுத்தப் பட்ட முஸ்லிம்கள் (BCM) எனப்படும் சாதி சான்றிதழை வழங்க முடியாது என கடந்த 25.06.26 அன்று மதுரை உயர்நீதிமன்ற கிளையில் நீதியரசர் G.R சாமிநாதன் தலைமையிலான இரு நீதிபதிகள் அமர்வு இந்திய அரசாணை 31 ஐ ரத்து செய்துள்ளது.

ஏற்கனவே இரு நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புக்கும், 31.01.2024 அன்று பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத் தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் அரசாணைக்கும் எதிராக இத்தீர்ப்பு உள்ளது.

ஏற்கனவே உள்ள இரு நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பு தவறானது என மற்ற இருநீதிபதிகள் கருதினால் அந்த வழக்கை மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்க பரிந்துரைக்க வேண்டுமே ஒழிய, முந்தைய இரு நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக புதிய தீர்ப்பை வழங்குவது தவறானது என சட்ட வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

இது குறித்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது காலதாமதத்தை ஏற்படுத்தும் என்றும் அது பல புதிய சிக்கல்களுக்கு கூட வழிவகுக்கும் என்றும் அஞ்சப்படுகிறது.

எனவே தமிழ்நாடு சட்டமன்றத்தில் புதிதாக இஸ்லாத்திற்கு மாறுபவர்களுக்கும் BCM சான்றிதழ் கிடைக்கும் வகையில் உடனடியாக புதிய சட்டம் இயற்ற வேண்டும். சட்ட திருத்தம் கொண்டு வந்து வழக்குகள் முடியும் வரை அரசாணை எண் 31 செல்லும் என்ற நீதிபதிகள் M.S. ரமேஷ் மற்றும் சக்திவேல் தலைமையிலான அமர்வின் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும்

இதை முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் அரசு கவனத்தில் கொண்டு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என செயற்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

### தி.மு.க. கூட்டணியை வலிமைப்படுத்துதல்

தமிழ்நாட்டில் நலனுக்கு மட்டுமின்றி; மொத்த இந்தியாவின் நலனுக்கும் தி.மு.க. தலைமையிலான அரசியல் கூட்டணியின் தேவை அவசியமாகிறது. அந்த வகையில் தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியை வலிமைப்படுத்தும் எல்லா முயற்சிகளிலும் மனிதநேய ஜனநாயகக் கட்சி செயலாற்றும்.

### சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு

இந்தியாவின் 16 மாநிலங்களில் தற்போது நடைபெற்று வரும் சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான முன்னோட்ட ஆய்வில், சாதிகளை குறிப்பிடுவதற்கான இடம் காலியாகவிடப்பட்டு அதில் சாதியின் பெயரை பொதுமக்களே நேரடியாக கைப்பட எழுதும் முறை கடைபிடிக்கப்படுவதாக தகவல்கள் வருகின்றன. இது தோல்வியடைந்த ஒரு முறையாகும். மேலும் கணக்கெடுப்புக்கான நோக்கத்தை திட்டமிட்டு பலவீனப்படுத்தும் சூழ்ச்சியாகவும் தெரிய வருகிறது.

எனவே சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது; மக்கள் தொகை விவரங்களை எண்ணும் போது அரசின் சாதி பட்டியலை காட்டி அதிலிருந்து அவர்களின் சாதி விவரங்களை பதிவு செய்யும் முறையை இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையம் கடைப்பிடிக்க வேண்டும் என செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

### பயிர் கடன்களை முழுவதுமாக தள்ளுபடி செய்க

தமிழக வெற்றிக் கழகம், தங்களது தேர்தல் அறிக்கையில் விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதியின்படி; தற்போது புதிதாக பொறுப்பேற்றிருக்கும் தமிழக வெற்றிக்கழக கூட்டணி அரசில் விவசாயிகளின் கூட்டுறவு பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

விவசாயிகளின் இன்னல்களை கருத்தில் கொண்டும், கடன் சுமையால் அவர்கள் தற்கொலை செய்வதை தடுக்கும் நோக்கோடும் இவ்விஷயத்தில் மாண்புமிகு முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் அரசு உரிய அறிவிப்பினை செய்ய வேண்டும் என இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

### சிதம்பரம் வரை இரயில்கள் நீட்டிக்க வேண்டும்

கோவை மயிலாடுதுறை ஜனசதாப்தி விரைவு இரயிலை சிதம்பரம் வரையிலும் நீட்டிக்க வேண்டும்.

அயோத்தி இராமேஸ்வரம் விரைவு ரயிலை சிதம்பரம் ரயில் நிலையத்தில் நின்று செல்ல வேண்டும்.

வேளாங்கண்ணி மயிலாடுதுறை தினமும் பயணிக்கும் ரயில்கள் எண் 56007 மற்றும் 56008 ஐ சிதம்பரம் வரை நீட்டிக்க வேண்டும்.

இம்மூன்று கோரிக்கைகளையும் தென்னக ரயில்வே உடனே செயல்படுத்திட வேண்டும் என செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

### மசூதிகளை இடிக்கும் நடவடிக்கைகளுக்கு கண்டனம்

உத்தரப்பிரதேசத்தில் பாஜக முதல்வர் யோகி அரசாங்கம் ஏறத்தாழ 350 க்கும் மேல் மசூதிகள் மற்றும் கல்விக் கூடங்களை இடித்துள்ளார். இது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும்.

தங்கள் மாநிலத்தில் அரசியல் பெரும்பான்மை பலம் இருக்கிறது என்ற ஆணவத்தில், ஒரு சமூக மக்களின் வழிபாட்டுதலங்களை போலியான காரணங்களை கூறி இடிப்பது பாசிசத்தின் தொடர்ச்சியாகும். இதை ஜனநாயக சக்திகள் மௌனம் கலைத்து எதிர்க்க வேண்டும் என செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

### ஆயுள் சிறைவாசிகளை விடுதலை செய்க

தமிழக சிறைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து வரும் ஆயுள் கைதிகளை, மனிதாபிமான அடிப்படையில் சாதி, மத, வழக்கு பேதமின்றி விடுதலை செய்ய வேண்டும் என்று செயற்குழு தமிழக அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

### தொகுதி மக்களுக்கு நன்றி !

கடந்த 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் மனிதநேய ஜனநாயக கட்சிக்கு சிதம்பரம் சட்டமன்ற தொகுதி ஒதுக்கப்பட்டது. அதில் மனிதநேய ஜனநாயக கட்சியின் தலைவர் மு.தமிமுன் அன்சாரி அவர்கள் போட்டியிட்டு வெற்றிப் பெற்றார்.

அவருக்கு வாக்களித்த சிதம்பரம் தொகுதி மக்களுக்கும், அவரது வெற்றிக்கு பாடுபட்ட திமுக தலைமையிலான தோழமைக் கட்சியினருக்கும், மாவட்ட மஜக தொண்டர்களுக்கும் செயற்குழு நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் இணைப் பொதுச் செயலாளர் நாச்சிக்குளம் தாஜ்தீன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியை மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் கலைக்குயில் இப்ராஹிம் அவர்கள் தொகுத்து வழங்கினார். முத்தாய்ப்பாக ம.ஜ.க.வின் கொள்கை முழக்கங்களை துணைப் பொதுச் செயலாளர் நாகை முபாரக் முழங்க, கூட்டம் பின்தொடர்ந்தது. நிறைவாக மாவட்ட செயலாளர் லால் பேட்டை ஜாகிர் அவர்கள் நன்றி கூறினார்.



ஈரோடு வடக்கு மாவட்டம் அந்தியூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், அந்தியூர் ஒன்றிய கழக செயளாளருமான ஏ.ஜி.வெங்கடாச்சலம் தாயார் திருமதி ஏ.ஜி.குப்பாயம்மாள் மறைவையொட்டி முன்னாள் அமைச்சரும் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயளாளருமான சு.முத்துசாமி அன்னாரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்திவிட்டு அவரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். உடன் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

# முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அறிக்கை!

சென்னை, ஜூலை 11-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்த நாள் விழா ஜூலை 11,12 தேதி பொதுக்கூட்டத்தில் திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை யாற்றுகிறார் என மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஜூலை 11,12 தேதிகளில் தூத்துக் குடி தெற்கு மாவட்டத்தில் இரண்டு இடங்களில் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பல நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதன் ஒருபகுதியாக ஜூலை 11 அன்று மாலை 6 மணிக்கு ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதி சாத்தான்குளத்தில்



வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.எஸ். ஜோசப் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ.பால முருகன் வரவேற்புரையாற்றுகிறார். கழக நிர்வாகிகள் பி.தினேஷ் ராஜாசிங், ஏ. இந்திரகாசி, ஏ.எஸ்.ஆறுமுகபாண்டியன், ஜெ. ரெஜினிஸ்டெல்லாபாய், எஸ். சுரேஷ்குமார், டாக்டர். அஜய் ரெக்ஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். பேரூர் செயலாளர் மகா இளங்கோ நன்றியுரை யாற்றுகிறார்.

இதேபோல் ஜூலை 12ம் தேதி மாலை 6 மணிக்கு ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி வல்லநாட்டில் கருங்குளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.ராமசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.சுரேஷ்காந்தி வரவேற்புரையாற்றுகிறார். ஒன்றியச் செயலாளர்கள் கே.கே. ஆர். ஜெயக்கொடி, புதூர் எஸ்.ஆர். சுப்பிரமணியன், ஏ.இளையராஜா, ஆர்.சரவணக்குமார், த.சிவக்குமார், ஆர்.ஆஸ்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஒன்றிய அவைத்தலைவர் யு.வெங்கடசுப்பு நன்றியுரையாற்றுகிறார். இந்த கூட்டத்தில் கலைமாமணி இசையரசு டாக்டர் இறையன்பு குத்தூஸ் வழங்கும் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இக்கூட்டங்களில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற மேலவை குழுத் தலைவருமான திருச்சி சிவா எம்.பி., அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. சிறப்புரை யாற்றுகின்றனர். மேலும் கழக நிர்வாகிகள் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், சரத்பாலா, அஜிதா அக்னல், டாக்டர்.செ.வெற்றிவேல், ஜெ.ஜெசி பொன்ராணி, எஸ்.எஸ். மனோஜ், அ.பிரமசக்தி, க.மாடசாமி, சி. எஸ்.டி.செந்தூர்மணி, எஸ். அருணாச்சலம், ஜெ.ஜெயக்குமார் ரூபன், ச.ஆறுமுகப் பெருமாள், ஜெ.ஜெப தங்கம் பிரேமா, வி.பி.ராமநாதன், பி.எம்.ராமஜெயம் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

இந்த கூட்டங்களில் அந்தந்த தொகுதிகளில் உள்ள மாநில மாவட்ட நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள் மாவட்ட அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டம் வார்டு கிளை செயலாளர்கள்சா ர்பு அணிகளின் அந்தந்த பகுதி நிர்வாகிகள் கழக முன்னணியினர் பொது மக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலார் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை தெரிவித்துள்ளார்.

பாலவாக்கம் பகுதியில் தொடர் மின்வெட்டு;

# முதலமைச்சர் செல்லும் சாலையில் பொதுமக்கள் மறியல் போராட்டம்!

## அதிகாரிகளுடன் வாக்குவாதம்; பரபரப்பு!

சென்னை, ஜூலை 11–

பாலவாக்கம் பகுதியில் தொடர் மின்வெட்டை கண்டித்து முதலமைச்சர் செல்லும் சாலையில் பொதுமக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மின்வாரிய அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது. தமிழ்நாடு முழுவதும் கடந்த பல நாட்களாக தொடர்ந்து பல்வேறு இடங்களில் மின்தடை ஏற்பட்டு ஆங்காங்கே பொதுமக்கள் மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிடுதல், சாலை மறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று நள்ளிரவு கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பாலவாக்கம் பகுதியில் இரவு 9 மணிக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. பல மணி நேரமாக தொடர் மின்வெட்டு ஏற்பட்டதால் அப்பகுதி மக்கள் இரவில் தூங்க முடியாமல் தவித்தனர். மின்வாரிய அதிகாரிகளுக்கு புகார் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் 100க்கும் மேற்பட்டோர் தங்களது குழந்தைகளுடன் மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு அங்கிருந்த அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது, பொதுமக்களின் கேள்விக்கு மின்வாரிய அதிகாரிகள் முறையான பதில் அளிக்காததால், கோபமடைந்த மக்கள், கிழக்கு கடற்கரை சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.இதனால் கிழக்கு கடற்கரை சாலையில் நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதுகுறித்து தகவலறிந்ததும் நீலாங்கரை போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து, மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது அவர்கள், முதலமைச்சர் தினந்தோறும் இவ்வழியாகத்தான் செல்கிறார்.

அவருக்கு மின்தடை பற்றி தெரியாதா, அவர் வீட்டில் ஜெனரேட்டர் வைத்துகொண்டு தூங்குவார், எங்கள் வீட்டில் ஜெனரேட்டர் இல்லையே, நாங்கள் ஏழைகள், என்ன செய்வது என சரமாரி கேள்வி எழுப்பினர். இதையடுத்து தவெக நிர்வாகிகளை பொதுமக்கள் சூழ்ந்துகொண்டு கேள்வி எழுப்பியபோது, எந்தவித பதிலும் அளிக்காமல் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர். இதனையடுத்து போலீசார் தொடர்ந்து பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியதையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், இப்பகுதிகளில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுகிறது. தற்போது நள்ளிரவு 12 மணி ஆகிறது.

குழந்தைகளை வைத்துகொண்டு தூங்க முடியாமல் தெருவில் நின்று கொண்டிருக்கிறோம். இதை எல்லாம் பார்த்தால் எங்களை அரசு அலட்சியப் படுத்துவதுபோல் இருக்கிறது. நாங்கள் எல்லாம் கஷ்டப்படுகிற குடும்பத்தை சேர்ந்தவர்கள். பள்ளிக்கு செல்லும் குழந்தைகள், கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள், முதியவர்கள், நோயாளிகள் வீட்டில் தூங்க முடியாமல் அவதிப்பட்டு வருகிறோம். மின்சாரம் துண்டிக்கப்பட்டபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் சுவிட்ச் ஆப் செய்து வைக்கின்றனர். எனவே, அமைச்சர் மற்றும் உயரதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு செய்து எங்கள் பகுதிக்கு சீரான மின்சாரம் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சீர்காழி வை. ஞானசேகரன்

### ஜூலை 11 (2014)



அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் தமிழ்ப் பெருமன்ற செயலாளராக – மாணவர் திராவிட கழகத் தலைவராகவும் இருந்தபோது மாணவர்களை ஒருங்கிணைத்து தமிழின உணர்வு பொதுக்கூட்டம் தமிழீழ ஆதரவு பொதுக்கூட்டங்களை தொடர்ந்து நடத்தியதோடு, முதன்முதலாக தந்தை பெரியார் படத்தை திறந்து வைத்தவர்.

ஈழத் தமிழர்களுக்காக நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

கீழத் தஞ்சை மாவட்ட தி.க. செயலாளராக இருந்தபோது, ஈழத் தமிழர்களுக்கு மயிலாடுதுறையில் மிகப் பெரிய மாநாட்டை நடத்தியவர்.

அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் படிக்கும்போது மிசாவை கடுமையாக எதிர்த்து மாணவர்களிடம் துண்டறிக்கை வழங்கியவர்.

சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, ‘கலைஞர் செம்மொழி நூலகம்’, ‘தளபதி மு.க.ஸ்டாலின் சிறுவர் விளையாட்டரங்கம்’ ஆகியவற்றை அமைத்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்

தலைமைக் கழகம்

தி.மு.க.